லக்ஷணம் — முதலில் பார்ஷ்ணி பார்ச்வகத ஸ்தானகத்தில் நிற்கவேண்டும். பிறகு ஒரு பாதத்தை சமமாகவும் அதன் குதிகாலின் பக்கத்தில உட்புறத்தில் மற்றொரு காலின் குதிகாலை சாய்வாக வைத்து ரேசகத்தைப் புரியவும். இதற்குப் 'பார்ச்வரேசிதா சாரீ' என்று பெயர்.

ரேசகம் எனில் அடிக்கடி மேலும் கீழும் பக்கங்களிலும் அசைப்பதாகும். இந்த சாரியில் 'ஆவித்தவக்த்ர ஹஸ்த' முத்திரையைத் தரிக்கவேண்டும். ஆவித்தவக்த்ர ஹஸ்தமெனில் ஈரமான கேசத்தை அவசரமாக சீர்படுத்துவது போல முன்கை, முழங்கை, தோள் இவற்றை மேலிருந்து கீழாக இரு கைகளையும் முறையே விலாசமாக நீட்டி உள்ளங்கை கீழ் நோக்கும்படி பதாக ஹஸ்த முத்திரையில் வைப்பதாகும்.

११. मदालसा चारी।

व्यस्तावितस्ततो वापि चरणौ शिथिलौ भुवि।
यत्र मत्तवदाहुस्तां चारीं धीरा मदालसाम्॥ १७४
प्रायशो वलितावत्र शिथिलौ वा लताकरौ।

11. MADALASA CARI

(174-175) If the feet move here and there in a languid manner like one who is intoxicated, then it is called 'Madalasa Cari'. In this cari

the hands hold Latakara Mudra in a languid and twisted manner.

११. मदालसा चारी ।

मस्तमनुष्यापरीं दोन पांयहीं या बाजूस त्या बाजूस व्यत्यस्तेंकरून शिथिलप्राय भोईवरि ठेवून मुरडलेलें ऐशे अथवा शिथिलप्राय ऐशेहो लताकर धरावे । लताहस्त ह्मणिजें बाजूस दोनहातहीं पताक हस्त धरून पसरून खांद्या पासून समग्रहातहीं वारंवार डोलविल्यां लताहस्त होतो ॥

11. மதாலஸா சாரி

போதையிலுள்ளவனைப்போல் இரு கால்களையும் மாறி மாறி இரு பக்கங்களிலும் தளர்த்தித் தரையில் வைக்கவேண்டும். கரங்களைத் திருப்பியோ அல்லது தளர்த்தியோ 'லதா ஹஸ்த' முத்திரையைத் தரிக்கவும். லதா ஹஸ்தமெனில் இரு கரங்களையும் பதாக ஹஸ்தமாக பக்கங்களில் நீட்டி புஜங்களிலிருந்து இரு கரங்களையும் கீழ் மேலாக அடிக்கடி (பறவைகள் இறக்கையை அடித்துக் கொள்வதுபோல்) அசைப்பதாகும்.

१२. तलोद्वृत्ता चारी ।

अंगुलीपृष्ठभागाभ्यां पुरः पश्चात्स्मृतौ यदा ॥ १७५

प्रपदाभ्यां तदा पादौ तलोद्वृत्ता मता सताम् ।
अर्धचन्द्रः कटीन्यस्तस्तथान्यस्त्वलपल्लवः ॥ १७६

अग्रोत्क्षिप्तक्रियासार्धमेकक्रमविपर्यया ।
हस्तक्रियानुज्ञातव्या लक्ष्यदृष्ट्या मयोदिता ॥ १७७

12. TALODVRTTA CARI

(175-177) If the feet move forward and backward on the toes and on the back of the feet as well as on the fore-part the cari is called Talodvrtta. The movement of the feet is accompaniad by one hand in Ardhacandra mudra resting on the hip and the other holding Alapallava Mudra-following the feet that is in motion.

१२. तलोद्वृत्ता चारी ।

प्रथमतः पांयांच्या बोटाचा पृष्ठभाग भोईस लगेलसें दोन पांयहीं क्रमानें पुढें सरकवून त्यानंतरें पांयांचे अग्रभागमात्र भोईस लगेलसें दोन पांयहीं क्रमाने माघे सरकविणें यांत एक अर्धचन्द्रहस्त माजावरि ठेविणें, जो पांय पुढें सरकेल त्यावाजूचा दुसा हात अलपल्व हस्त धरून पुढें न्यावा । याला तलोद्वृत्ताचारी ह्मणणें ॥ माघेसरकविणें ह्मणावायाचा प्रकार रत्नाकरांत नाहीं ॥

12. தலோத்வ்ருத்தா சாரி

கால்களின் விரல்களை உட்புறத்தில் மடக்கிக்கொண்டு இருகால்களாலும் முன்னே நகர்ந்து, பின்னர் முன்பாதத்தில் மட்டில் (பாதத்தின் இதர பாகங்களைத் தரையில் வைக்காமல்) நின்று பின்னே நகரவேண்டும். இந்த சாரீயில் ஓர் ஹஸ்தத்தை 'அர்த்தசந்த்ர' ஹஸ்த முத்திரையில் இடுப்பின்மீது வைக்கவேண்டும். எந்தக் காலால் முன் நகருகிறோமோ அப்பக்கத்திலுள்ள கையால் அலபல்லவ ஹஸ்த முத்திரையைத் தரித்து எதிரே நீட்டவேண்டும். இதற்கு 'தலோவ்ருத்தா சாரீ' என்று பெயர். ரத்னாகரம் எனும் நூலில் காலைப் பின்னே நகர்த்துவதைப்பற்றி குறிப்பிடவில்லை.

१३. ऊरुवेणी चारी ।

ऊरु स्वस्तिकबन्धादौ पार्श्वाभ्यां घर्षति क्षितिम् ।
भ्रमन्तौ संभ्रमादेव ऊरुवेणी तदोदिता ॥ १७५

उक्तशिखरसंयोगो वक्षसस्यान्नरोत्तमैः ।

13. URUVENI CARI

(178-179) If the thighs are made to cross each other and in that act rub against the earth by the outer side of the feet with a rotation, the cari is called Uruveni cari. In this cari the hands hold Sikhara hasta (Asamyuta hasta No. 7) at the chest.

१३. ऊरुवेणी चारी ।

मांड्याच्या प्रदेशांत स्वस्तिकाकारकरून पावलाच्या पार्श्वभागां कडून भूमीस घर्षण करिणें; त्यानंतरे ससंभ्रम चक्राकार फिरणें, ते ऊरुवेणी म्हणिजेतें । यांत वक्षःस्थलाचे ठायीं शिखरहस्त धरिणें ॥

13. ஊருவேணி சாரீ

முதலில் துடைப் ப்ரதேசத்தில் ஸ்வஸ்திகாகாரமாகக் கால்களை வைத்து, பாதங்களின் ஓரத்தால் தரையைத் தேய்க்கவும். பின்னர் வட்டமாகச் சுற்றி நிற்கவேண்டும். இதற்கு 'ஊருவேணி சாரீ' என்று பெயர். இந்த சாரீயில் மார்பினருகில் இரு கைகளாலும் 'சிகர ஹஸ்த' முத்திரையைத் தரிக்கவேண்டும்.

१४. ऊरुताडिता चारी ।

एकपादस्थानसंस्थो भूस्थेन चरणेन हि ॥ १७९

यदोरुं ताडयत्याशुतदोक्ता चोरुताडिता ।

क्रमात्पादान्तरेऽप्येवमाहुः केचिद्विचक्षणाः ॥ १८०

लताकरौ किल प्रोक्तावस्यां चार्यां नटोत्तमैः ।

14. URUTADITA CARI

(179—181) Standing on one leg, the dancer raise the otherfoot from the ground and strikes the other thigh quickly This is called Urutadita Cari. According to certain authorities, this is repeated with the other leg also. In this cari both the hands hold 'Lata Hasta' (Nritta Hasta No. 15)

१४. ऊरुताडिता चारी ।

प्रथमतः दोन पांयहीं भोईवरि एकवीतीच्या अंतरानें समान ठेवून त्यानंतरें एकपांय अग्रभागमात्र भोईस लागेलसें उचलून गुडघा बाहेरिल्या बाजूस झुकविणें, दुसरा पायहीं भोईवरी स्वल्प उचलून गुडघा बाहेरिला बाजूस झुकविणें, त्यानंतरे भोईवरि ठेविला आहेतो पांय उचलून मांड्यावरि वडविणें. क्रमानें दुसऱ्यापांयां कडूनहीं मांड्ययावरि वडविणे ह्मणून कित्तेकांच मत समजावें । यांत दोन हताने लताकार धरावे लताकार ह्मणिजे बाजूस दोन हातहीं पताक हस्त धरून पसरून समग्र हातहीं वारंवार डोल विल्यां लताहस्त होतो ॥

14. ஊருத்தாடிதா சாரீ

ஒன்றுக்கொன்று ஒரு சாண் தூரத்தில் இருக்குமாறு இரு பாதங்களையும் சமமாகத் தரையின்மீது வைத்து நிற்க வேண்டும். பிறகு ஏதேனும் ஓர் காலை முன் பாதம் தரையில் இருக்க, பின் பாதத்தைச் சிறிது உயர்த்தி முழங்காலை வெளிப்புறத்தில் சிறிது சாய்க்கவும். மற்றொரு காலின் (பாதத்தையும் அவ்வாறே வைத்து) முழங்காலை வெளியே சாய்த்து உயர்த்தி பாதத்தால் முதலில் வைத்த காலின் துடையில் தட்டவேண்டும். சிலர் இரு பாதங்களாலும் முறையே மேற்கூறியவாறு செய்யவேண்டும் என்று கூறுகின்றனர். இந்த சாரீயில் இரு கரங்களும் 'லதா ஹஸ்த' முத்திரையைத் தரிக்கவேண்டும்.

१५. हरिणत्रासिता चारी ।

कुञ्चितांघ्रितले किञ्चिच्चलिते स्वास्तिकीकृते ॥ १८१

उत्प्लुत्यांघ्र्योर्निपतिते हरिणत्रासिका मता ।

पताकौ स्वस्तिकीभूतौ शिथिलावप्यधस्तलौ ॥ १८२

अत्र हस्तौ समादिष्टौ लक्ष्यदृष्टच विचक्षणैः ।

15. HARINATRASITA CARI

(181-183) The feet are bent inward and cross each other with a shake. The dancer then jumps up on his feet and comes down to his normal pose. In this cari the hands with 'Pataka Hasta' (Asamyuta hasta No. 1) are held languidly crossing each other palm downward.

१५. हरिणत्रासिता चारी ।

दोन पांयाचे तलवे थोडे वांकवून थोडे काम्पवून त्यानंतरे स्वस्तिकाकार दोन पायहीं तिर्कस ठेवून स्वल्प उडून पांय आपुल्या ठिकाणांत स्वाभाविक ठेविणें । यान्त अधस्तल पताकहस्त स्वस्तिकाकार तिर्कस आणि शिथिलप्राय होईलसें धरिणें ॥

15. ஹரிணத்ராஸிதா சாரி

சமமாக உள்ள இரு உள்ளங்கால்களையும் சிறிது வளைத்து சிறிது அசைத்து கால்களை ஸ்வஸ்திகாகாரமாக சாய்த்துவைக்கவேண்டும். பின்னர் சிறிது தாவி முதலில் இருந்ததுபோல் சமமாக நிற்கவேண்டும். இந்த சாரீயில் உள்ளங்கை கீழ் நோக்க, இரு கரங்களையும் பதாக முத்திரையுடன் ஒன்றுக்கொன்று குறுக்காகவும் தளர்த்தியும் பிடிக்கவேண்டும்.

१६. तिर्यक्कुञ्चिता चारी ।

तिरश्चीनं यत्र पादमाकुञ्च्य प्रक्षिपेन्मुहुः ॥ १८३

तलाग्रेण तदा प्रोक्ता तिर्यक्कुञ्चितिका खलु ।
चतुरस्रौ करौ ज्ञेयौ अस्यां चार्यां यथोचितौ ॥ १८४

15. TIRYAKKUNCITA CARI

(183-184) When the legs placed in oblique direction strike the ground with their fore-feet, one after the other then it is called Tiryakkuncita cari. In this cari the mudra to be held by the hand is Caturasra (Nrtta hasta No. 1).

१६. तिर्यक्कुञ्चिता चारी ।

एक पाय तिर्कस ठेवून स्वल्प वांकवून पादाग्रकडून भोईवरि वारंवार वडविणें यांत चतुरश्रकर समयानुसार चांगलें धरावे । चतुरस्र ह्मणिजे उरासमोर आठ अगुलापलीकडें खांद्यासमुमारीनें दोन कोंपरें समान जोडून कटकामुखहस्त धरित्यां चतुरस्रकर होतो ॥

16. திர்யக்குஞ்சிதா சாரீ

முதலில் சமபாதத்தில் நின்று பின்னர் ஒரு காலைச் சிறிது சாய்த்தும் வளைத்தும் வைக்கவேண்டும். பிறகு அந்தக் காலின் முன் பாதத்தால் பூமியை அடிக்கடி தட்டவும். இதற்கு 'திர்யக்குஞ்சிதா சாரீ' என்று பெயர். இந்த சாரீயில் சந்தர்ப்பத்தை அனுசரித்து சதுரச்ரகர முத்திரையைத் தரித்தல் வேண்டும். சதுரச்ரம் எனில் மார்பிற்கு எதிரில் எட்டு அங்குல தூரத்தில் தோள்களுக்குச் சமமாய் முழங்கைகளை உயர்த்தி கடகாமுக ஹஸ்த முத்திரையைத் தரிப்பதாகும்.

१७. अर्धमण्डला चारी ।

भूमिसंघर्षणात्पादौ व्यावर्त्येते शनैः क्रमात् ।
अंघ्री यत्र वदन्त्येनामर्धमण्डलिकां बुधाः ॥ १८५

अत्रैकस्त्रिपताकस्स्यादुरःक्षेत्रचरः परः ।
पताकः पार्श्वाभिमुखतलः पादक्रियानुगः ॥ १८६

17. ARDHAMANDALA CARI

(185-186) When the feet are made to perform a winding circular movement outward, rubbing

the ground slowly, then it is called Ardhamandala cari. In this cari one of the hands holds Tripataka mudra (Asamyuta hasta No. 2) near the chest and the other Pataka mudra (Assamyuta hasta No. 1) with the palm facing the side The latter hand follows the course of the moving foot.

१७. अर्धमण्डला चारी ।

दोन पांयहीं प्रथमतः समान ठेवून त्यानंतरें क्रमाने एकेक पांय भोईस चिकटल्यासारिखें हळू बाजूस नेवून पावूल कानडें करून तलपांय आंतिल्यापट्टींत दिसेलसे करणें । यान्त उरावरि त्रिपताकहस्त धरिणें, दुसऱ्या हातानें पताकहस्त पार्श्वाभिमुख तलाहाता होईलसें पाद व्यापारास अनुसरून धरावा ॥

17. அர்த்தமண்டல சாரீ

முதலில் இரு கால்களையும் சமபாத ஸ்தானகத்தில் வைக்கவேண்டும். பிறகு ஒவ்வொரு பாதத்தையும் பூமியில் இருந்து சிறிதும் உயர்த்தாது மெதுவாகப் பக்கத்தில் நகர்த்தவேண்டும். இரு பாதங்களையும் நகர்த்திய பின்னர் இரு உள்ளங்கால்களும் எதிரெதிரே இருக்கும்படி சாய்த்து நிறுத்தவேண்டும். இதற்கு 'அர்த்தமண்டல சாரீ' என்று பெயர். இந்த சாரீயில் ஒரு கையால் பாதங்களை அனுசரித்து உள்ளங்கை பக்கத்தை நோக்கும்படி 'பதாக ஹஸ்த' முத்திரையைத் தரித்தல் வேண்டும்.

१८. संचारिता चारी ।

अंघ्रिराकुञ्चितोत्क्षिप्त उत्क्षिप्यान्येन सम्मिलेत् ।
संसर्पेत्तिर्यगन्यत्तु प्रोक्ता संचारित मता ॥ १८७

18. SANCARITA CARI

(187) One of the feet is bent and raised and joined with the other foot. The latter moves towards it obliquely on the ground. This is called Sancarita cari.

१८. संचारिता चारी ।

एक पावूल थोडें मुदडून उचलून वारंवार दुसऱ्यापायांशी मिळविणें । त्यानंतरे दुसरा पावूल तिर्कस करून शिविणें ॥

18. சஞ்சாரிதா சாரி

ஒரு பாதத்தைச் சிறிது மடித்து உயர்த்தி, மற்றொரு பாதத்துடன் சேர்க்கவேண்டும். மற்றொரு பாதத்தைச் சாய்த்து அதனருகில் நகர்த்தவேண்டும். இதற்கு 'சஞ்சாரிதா சாரீ' என்று பெயர்.

१९. आकुञ्चिता चारी ।

उत्क्षिप्य कुञ्चितावंघ्री न्यस्तावेकैकशोऽग्रतः ।
यस्यां सा कुञ्चिता चारी प्रोच्यते तद्विचक्षणैः ॥ १८८

अत्र चारीद्वये प्रोक्तौ दण्डपक्षौ यथोचितौ ।

19. AKUNCITA CARI

(188-189) When the legs are bent one by one and raised a little and then placed forward it is called 'Akuncita cari.' In this cari and in the previous one, the hands hold 'Dandapaksa hasta' Nrtta hasta No. 19).

१९. आकुञ्चिता चारी ।

क्रमानें एकेक पांय स्वल्प मुडून उचलून पुढे ठेवणें । यांत दण्डपक्षहस्त धरावे ॥ दण्डपक्षहस्त म्हणिजे एक्या हातानें उरःप्रदेशाचे ठायीं हंसपक्षहस्त धरून दुसऱ्या हातानें पताकहस्त धरून विलास-युक्त, बाजूस पसरिणें ॥

19. ஆகுஞ்சிதா சாரீ

முறையே ஒவ்வொரு காலையும் சிறிது மடித்து உயர்த்தி முன்புறத்தில் வைக்கவேண்டும். இதற்கு 'ஆகுஞ்சிதா சாரீ' என்று பெயர். மேற்சொன்ன இரண்டு சாரிகளிலும் தண்டபக்ஷ ஹஸ்த முத்திரையைத் தரிக்கவும். தண்டபக்ஷஹஸ்தம் எனில் ஓர் கையால் மார்புப் பிரதேசத்தில் 'தண்டபக்ஷஹஸ்த' முத்திரையையும் மற்றொன்றால் 'பதாகஹஸ்த முத்திரையையும் தரித்து விசாலமாகப் பக்கங்களில் விரிப்பதாகும்.

२०. स्तम्बक्रीडनिका चारी ।

तिर्यक्प्रसृतपादस्य पार्श्वमन्यतलेन हि ॥ १८९

मुहुस्संयोजितं यत्र स्तंबक्रीडनिका हि सा ।

करावत्र प्रयोक्तव्यौ स्वस्तिकौ विप्रकीर्णकौ ॥ १९०

20. STAMBAKRIDANIKA CARI

(189-190) One foot is extended in a oblique direction and the sole of the other foot is put in contact pepeatedly with the first. Then it is called 'Stambakridanika cari'. In this cari the hands hold Viprakirna mudra (Nrtta hasta No. 5)

२०. स्तम्भक्रीडनिका चारी ।

एकपांय तिर्कस पसरून त्याच्या पार्श्वासी दुसऱ्या पांया चा तळपांय वारंवार मिळविणें । यांत विप्रकीर्णहस्त पसरून धरावे ॥

20. ஸ்தம்ப க்ரீடனிகா சாரி

ஓர் காலை சாய்வாகப் பக்கத்தில் நிறுத்தி அதன் பக்கத்தில் மற்றொரு காலின் உள்ளங்காலை அடிக்கடி சேர்ப்பதற்கு 'ஸ்தம்ப க்ரீடனிகா சாரீ' என்று பெயர். இந்த சாரியில் விசாலமாக கைகளை விப்ரகீர்ண ஹஸ்த முத்திரையில் தரிக்க வேண்டும்.

२१. लङ्घितजङ्घा चारी ।

खण्डसूचीस्थानकस्य प्रसृतश्चरणो यदा ।
आकृष्टो वेगतस्त्वन्यपादेन यदि लंघ्यते ॥ १९१

तदा लङ्घितजंघेयं चारी प्रोक्ता मनीषिभिः ।
शिखरद्वन्द्वमन्येऽस्मिन् वक्षोदेशगतं विदुः ॥ १९२

यथायोग्यं करयुगं प्राहुः केचित्परे पुनः ।
विवर्तितौ त्रिपताकौ विचित्रवलनायुतौ ॥ १९३

21. LANGHITA JANGHA CARI

(191-193) Starting from Khanda Suci Sthanaka (Desi Sthanaka No. 15) the extended foot is quickly drawn back and the other foot makes a lunge forward. It is called Langhita Jangha cari. In this cari the hands hold Sikhara mudra (Asamyuta hasta No. 7) near the chest. According to

certain authorities the hands have to perform winding movements in a variety of forms with Tripataka or any other suitable mudra.

२१. लङ्घिताजङ्घा चारी ।

एक पांय थोडें वांकवून दुसरा पांय जो तो मांडया आणि टांचा हे दोनहीं भोईस लागेलसें तिर्कस पसरून तोच पांय पुनः वेगें कडून होडूंचेवून दुसऱ्या पांयानें वलांडिजेला तरि लङ्घितजङ्घा ह्मणिजेंते । यांत वक्षस्स्थलाचेठाईं दोन शिखरहस्त धरिणें ह्मणून किते काञ्च सिद्धान्त । यथायोग्य पताकत्रिपताक अलपल्लवादि-हस्त दोन हातानें धरावे ह्मणून मतांतर । विवर्तिकरणयुक्त नवल वाटेलसें फेरीशिं युक्त त्रिपातकहस्त धरावे ह्मणून मतान्तर समजावें ॥

21. லங்கிதஜங்கா சாரீ

ஒரு காலில் உட்கார்ந்து மற்றொரு காலைச் சிறிது சாய்வாக நீட்டவேண்டும். உடனே நீட்டிய காலை வேகமாக உள்ளே இழுத்து மற்றொரு கால் சிறிது தாவுதல் வேண்டும். இதற்கு 'லங்கிதஜங்கா சாரீ' என்று பெயர். இந்த சாரியில் மார்புப் பிரதேசத்தில் இரு கரங்களையும் சிகர ஹஸ்த முத்திரையில் தரிக்கவேண்டும் என்று சிலருடைய அபிப்ராயம். வேறு சிலர் ஸந்தர்பத்தை அனுசரித்து பதாகம், த்ரிபதாகம், அலபல்லவம் முதலிய ஹஸ்த முத்திரைகளைத் தரிக்கவேண்டும் என்று கூறுகின்றனர். விவர்த்தித கரணத்துடனும் கண்ணைக் கவரக் கூடிய சுற்றுகளுடனும் த்ரிபதாக ஹஸ்த முத்திரையைத் தரிக்கவேண்டும் என்று வேறு ஒரு சாரார் கூறுகின்றனர்.

२२. स्फुरिता चारी ।

स्फुरिताग्रे गतौ वेगाद्भूसंघृष्टांघ्रिपार्श्वयोः ।
वितस्त्यन्तरभाजोस्स्यात्त्रिपताकौ कराविह ॥ १९४

तथा तलमुखावन्यावथवा स्तो यथोचितौ ।

22. SPHURITA CARI

(194-195) When the feet keeping a distance of a span between them, quickly rub the ground by their sides and move forward, then it is called 'Sphurita cari'. In this the hands hold the Pataka mudra (Asamyuta No. 1) or Talamukha mudra (Nrtta hasta No. 3).

२२. स्फुरिता चारी ।

दोन पांयाचे बाहेरिले बाजू भोईस लागेलसें दोन पावलासहीं मध्ये वीतीचा अंतर असेलसेंहीं वेगानें क्रमेंकडून पुढें सरकविणें ते स्फुरिता ह्मणिजेते । यांत त्रिपताकहस्त धरावे । त्यानंतरें तलमुखहस्त धारवे । तलमुखहस्त ह्मणिजें दोबाजूस हंसपक्षहस्त बोटें ताठवून मांदल वाजवित्यापरी दोन तलवे सम्मुख होतींलसें खालिल्याभागीं धरिण ॥

22. ஸ்புரிதா சாரி

இரு பாதங்களின் பக்கங்களை வெளிப்புறத்தில் சாய்த்து ஒரு சாண் தூரத்தில் வைத்து வேகமாக முன் நகர்த்துவதற்கு 'ஸ்புரிதா சாரீ' என்று பெயர். இந்த சாரியில் த்ரிபதாக ஹஸ்த முத்திரையைத் தரிக்கவேண்டும்.

பிறகு தலமுக ஹஸ்த முத்திரையைத் தரிக்கவேண்டும். தலமுக ஹஸ்தமெனில் இரு பக்கங்களில் ஹம்ஸபக்ஷ ஹஸ்த முத்திரையைத் தரித்து மிருதங்கம் வாசிப்பதுபோல் விரல்களை விரித்தும் உள்ளங்கைகள் உட்புறத்தில் எதிரெதிரில் இருக்குமாறும் அபிநயிப்பதாகும்.

२३. अपकुञ्चिता चार ।

क्रमादाकुञ्चिताङ्घ्र्योर्हि पश्चाद्गत्याऽपकुञ्चिता ।
हंसास्यौ वाऽथ संदंशौ करावत्रोचितौ मतौ ॥ १९५

23. APAKUNCITA CARI

(195) When the legs are bent a little and taken towards the back one after the other it is called 'Apakuncita cari'. In this cari the hands hold 'Hamsasya' or 'Samdams' a mudra.

२३. अपकुञ्चिता चारी ।

स्वल्प वांकविले दोन पांय क्रमानें मार्गे नेणेंतें अपकुञ्चिता चारी ह्मणिजेते । यांत हंसास्यहस्त हो संदशहस्त हो दोन हातानें धरिणें ॥

23. அபகுஞ்சிதா சாரி

சிறிது வளைக்கப்பட்ட இரு கால்களையும் முறையே பின்னே கொண்டு போவதற்கு 'அபகுஞ்சிதா சாரீ' என்று பெயர். இந்த சாரியில் இரு கரங்களாலும் 'ஹம்ஸாஸ்ய ஹஸ்தம்' அல்லது 'ஸந்தம்ச ஹஸ்த' முத்திரையைத் தரித்தல் வேண்டும்.

२४. स्वस्तिका चारी ।

चरणौ स्वस्तिकाकारौ पार्ष्णिविद्धाय्यदा तदा ।
चारी स्वस्तिकसंज्ञा स्यादत्रोक्तस्स्वस्तिकः करः ॥ १९६

24. SWASTIKA CARI

(196) If, with the feet starting from Parsni viddha pose i. e., the heel of one foot being touched by the fore-part of the other, the legs are crossed, then it is called 'Swastika cari'. In this cari the hands hold Swastika mudra.

२४. स्वस्तिका चारी ।

प्रथमतः एका पायांच्या आङ्गोटयाशीं दुसऱ्या पांयाचा टांचा मिळेलसें दोन पांयही ठेवून त्यानंतरें दोन पांयहीं तिर्कस स्वस्तिकाकार ठेविल्या स्वस्तिकाचारी ह्मणिजेंतें । यांत स्वस्तिकहस्त धरावे । स्वस्तिकहस्त ह्मणिजें हंसपक्ष हस्त जेते मणगटयाचे ठायीं स्वस्तिकाकार जोडून अग्रभागीं परस्पर मिळविणें ॥

24. ஸ்வஸ்திகா சாரீ

முதலில் ஒரு பாதத்தின் பெருவிரலுடன் மற்றொன்றின் குதிகாலைச் சேரவைத்து, பிறகு இரு கால்களையும் சாய்த்து ஸ்வஸ்திகாகாரமாகச் செய்யவேண்டும். இதற்கு 'ஸ்வஸ்திகா சாரீ' என்று பெயர். இந்த சாரியில் ஸ்வஸ்திக ஹஸ்த முத்திரையைத் தரிக்கவேண்டும். ஸ்வஸ்திகஹஸ்தமெனில் முதலில் இரு கரங்களையும் ஹம்ஸபக்ஷ ஹஸ்தமாகத் தரித்து பின்னர் மணிக்கட்டுகளில் ஸ்வஸ்திகாகாரமாகச் செய்து கைகளின் நுனிப்பாகங்களைச் சேர்ப்பதாகும்.

२५. सङ्घट्टिता चारी ।

स्थाने विषमसूच्याख्ये तिष्टेदुत्प्लुत्य वेगतः ।
पतद्भुवि यदा पादौ युतौ सङ्घट्टिता तदा ॥ १९७

पताकौ त्रिपताकौ वा पूर्वपादानुगाविह ।
पादयोर्मिलने तु स्याच्छिखरौ हृदि सङ्गतौ ॥ १९८

25. SANGHATTITA CARI

(197-198) If, starting from Visama suci sthanaka i. e., the two legs extended towards the front and towards the back respectively, the dancer makes a jump and descends on his feet bringing them close together, it is called 'Sanghattita cari. In this cari the hands hold Pataka or Tripataka and extend them along with the leg, and then the hands hold Sikhara at the chest when the legs are brought together.

१५. सङ्घट्टिता चारी ।

दोन पांयाचे आंगोठेमात्र भोईंस लागतीलसें एक्याच समयांत एकपांय पुढिल्या भागीं पसरून दुसरापांय माघिल्या भागीं पसरून त्यानंतरें वेगानें उडून दोन पांयहीं मिळून असेलसें भोईवरि उभा ठाकणें ते सङ्घट्टिता ह्मणिजेंतें ॥ यांत पताक हस्तहो त्रिपताक हस्तहो प्रथमतः पादानुसार धरिणें, त्यानंतरें दोंन पांयहीं मिळवितानां वक्षस्थलाचे ठायीं दोन शिखरहस्त जोडून धरिणें ॥

25 ஸங்கட்டிதா சாரி

முதலில் ஓர் காலை முன்புறத்தில் நிட்டியும் மற்றோர் காலைப் பின்புறத்தில் நீட்டியும், கட்டை விரல்கள் மட்டில் தரையில் வைத்து நிற்கவேண்டும். பின்னர் வேகமாகக் குதித்து இரு கால்களையும் சேர்த்துப் பாதங்களைச் சமமாக வைத்து நிற்கவேண்டும். இதற்கு "ஸங்கட்டிதா சாரீ" என்று பெயர். இந்த சாரியில் பாதங்களை அனுசரித்து முதலில் பதாகம் அல்லது த்ரிபதாக ஹஸ்த முத்திரையைத் தரிக்கவேண்டும். இரு கால்களையும் சேர்க்கையில் இரு கரங்களாலும் சிகர ஹஸ்த முத்திரையை மார்புப் பிரதேசத்தில் தரிக்கவேண்டும்.

१६. खुत्ता चारी ।

पादाग्रेण भुवो घातः खुत्तोक्ता संप्रदायकैः ।
अन्ये वदन्ति पादस्य तिर्यग्गमनतः परम् ॥ १९९

पार्ष्ण्यां भुवमवष्टभ्य भूघातश्चेत्कृतोऽग्रतः ।
तदा खुत्तेति खुत्तायां पताको वर्तनाकृतः ॥ २००

26. KHUTTA CARI

(199—200) If the ground is stamped with the forefoot the cari is called "Khutta". Some authorities say that in this cari one foot is placed obliquely forward and resting on its heel, the ground is stamped with the fore-foot. In this cari the hands hold Pataka mudra performing a winding or revolving motion.

२६. खुत्ताचारी ।

पांयांच्या अग्रभागानें भोईवरि बडविणें ते खुत्ता ह्मणविजेतें ।

एक पांयटांचामात्र रोवून उभा ठाकून दुसरा पांय पुढें तिर्कस पसरून खालें वारंवार बडवित्यां खुत्ता ह्मणिजेतें । यांत पताक हस्त फिरवून धरावा ह्मणून नामान्तर ॥

26. குத்தா சாரி

முன் பாதங்களால் தரையைத் தட்டினால் "குத்தா சாரீ" என்று பெயர். ஓர் காலின் முன்பாதத்தை உயர்த்திக் குதிகாலை ஊன்றி மற்றோர் காலை முன்பக்கம் சாய்வாக நீட்டி அக்காலால் அடிக்கடி தரையைத் தட்டினால் 'குத்தா சாரீ'யாகும் என்று சிலர் கூறுகின்றனர்.

இந்த சாரியில் பதாக ஹஸ்த முத்திரையைத் தரித்துச் சுற்றவேண்டும்.

२७. तलदर्शिनी चारी ।

संहतस्थौ यदा पादौ तिर्यञ्चौ चेत्पृथक्कृतौ ।
भूस्पर्शौ बाह्यपार्श्वाभ्यां तदोक्ता तलदर्शिनी ॥ २०१

संयुज्य त्रिपताकाख्यौ वियुक्तौ पादकर्मणा ।
अत्रोक्तौ लक्ष्यदक्षौ हि केचित्सूचीमुखौ जगुः ॥ २०२

27. TALADARSHINI CARI

(201-202) If, starting from Samhata pose i. e. standing with the feet close together, the feet are separated in oblique directions and touch the floor by their sides, then the cari is called "Taladarshini". The hands holding Tripataka are joined together when the legs are close to each other; and separated when the legs are separated. Some authorities prescribe Suci mukha instead of Tripataka.

२७. तलदर्शिनी चारी ।

प्रथमतः स्वाभाविकपणानें समान उभेराहून पायांचे आंगोटे आणि घोंटेहीं जोडून ठेवून त्यानंतरें दोन पांयही बाजूस तिर्कस पसरून दोन पांयाच्या बाहेरिल्या पार्श्वाकडून भूमिस्पर्श केल्यां तलदर्शिनी ह्मणविजेतें यांत प्रथमतः दोनहातानें त्रिपताकहस्त पुढें जोडून धरून त्यांनंतरें पांय परस्पर सरकवितानां त्रिपताकहस्तहीं सरकविणें । पूर्वोक्तरीतीनें सूचीमुखहस्त धरावे ह्मणून मतांतर ॥

27. தலதர்சினீ சாரீ

முதலில் ஸம பாத ஸ்தானகத்தில் நிற்கவேண்டும். இரு கால்களின் கணு கால்களின் உட்புறமும் பெருவிரல்களும் சேர்ந்திருக்கவேண்டும். பிறகு இரு பாதங்களையும் பக்கத்தில் சாய்வாக விரிக்கவேண்டும். மேற்சொன்னவாறு பாதங்களை விரிக்கையில் பாதங்களின் வெளிப்புற ஓரம் மட்டில் தரையில் இருக்கவேண்டும். இதற்கு "தலதர்சினீ சாரீ" என்று பெயர். இந்த சாரியில் முதலில் இரு கரங்களாலும் த்ரிபாதக ஹஸ்த முத்திரையை முன்புறத்தில் சேர்த்துத் தரிக்கவேண்டும். கால்களைப் பக்கங்களில் நகர்த்துகையில் த்ரிபதாக ஹஸ்தங்களையும் மெதுவாக விரிக்கவேண்டும். மேற்சொன்னபடி த்ரிபதாக ஹஸ்த மில்லாது சூசீமுக ஹஸ்தத்தைத் தரிக்கவேண்டும் என்று சிலர் கூறுகின்றனர்.

२८. सारिका चारी ।

संहते समपादे वा यद्येकोंघ्रिः पुरोगतः ।
असकृद्वा सकृद्वापि तदोक्ता सारिका बुधैः ॥ २०३

पादानुगः करः प्रोक्तस्त्रिपताको यथोचितः ।
उच्यते कैश्चिदस्यां हि पादोऽग्रतलसञ्चरः ॥ २०४

28. SARIKA CARI

(203—204) If, starting from Samapada or Samhasta pose one of the leg is moved forward once or more than once. the cari is called 'Sarika'. In this cari the hands hold Tirpataka and follow the movement of the leg. Some authorities say that the feet move on their fore-feet in this cari.

२८. सारिका चारी ।

प्रथमतः स्वाभाविकपणानें समान समपाद स्थानकानें उभा ठाकून अथवा अंगोठे आणि घोंटे ही मिळून असतीलसे जोडूनहीं उभें ठाकून त्या पैकीं एकपांय एकदा अनेकदातरीं पुढे सरकविल्यां सारिका ह्मणिजेते । यांत पांयास अनुसरून त्रिपताकहस्त यथोचित धरिणें, यांत पुढे सरकविणेच्या पांयानें अग्रतलसंचार करावा ह्मणून मतांतर ॥

28. ஸாரிகா சாரீ

முதலில் இயற்கையாக நிற்பதுபோல ஸமபாத ஸ்தானகத்தில் நிற்கவேண்டும். அல்லது இரு கால்களின் பெருவிரல்களும் கணுக்கால்களின் உட்புறமும் சேர்த்து வைத்து நிற்கவேண்டும். பிறகு ஓர் காலை ஒரு முறை யாவது பன்முறையாவது முன் பக்கம் நகர்த்திக்கொண்டு போனால் "ஸாரிகா சாரீ" என்று பெயர். இந்த சாரியில் பாதத்தை அனுசரித்து த்ரிபதாக ஹஸ்த முத்திரையைத் தரிக்கவேண்டும். பாதத்தை முன்னே நகர்த்துகையில் முன் பாதத்தால் நகரவேண்டும் என்று சிலர் கூறுகின்றனர்.

२९. स्फुरिका चारी ।

पुरस्सरणमंघ्रिभ्यां समाभ्यां चेत्क्रमाद्भवेत् ।
स्फुरिका सा मताऽस्यां स्तश्चतुरावंघ्रिकर्मगौ ॥ २०५

29. SPHURIKA CARI

(205) Moving forward on the feet one after the other starting from the normal position is called 'Sphurika cari.' In this cari the hands hold Catura mudra and follow the feet in their movements.

२९. स्फुरिका चारी ।

प्रथमतः दोन पांयहीं समान भाईबरि ठेवून उभा ठाकून त्यानंतरे एकेक पांय क्रमाने पुढे सरकविल्यां स्फुरिका ह्मणिजेतें । यांत पायांस अनुसरून चतुरहस्त धरावे ॥

29. ஸ்புரிகா சாரீ

முதலில் இரு கால்களையும் சமமாக வைத்து நின்று, பிறகு ஒவ்வொரு காலால் முன்னே முறையே நகருவதற்கு 'ஸ்புரிகா சாரீ' என்று பெயர். இந்த சாரியில் பாதத்தை அனுசரித்து 'சதுர ஹஸ்த' முத்திரையைத் தரிக்கவேண்டும்.

३०. पुराटी चारी ।

मिथो निकुट्टनांघ्रिभ्यामुद्वृत्ताभ्यां पुराटिका ।
अत्र मुष्टीकरौ प्रोक्तौ पादकर्मोचितौ बुधैः ॥ २०६

30. PURATI CARI

(206) If resting on the fore-feet, the feet are made to strike each other, then it is called 'Purati cari' In this cari the hands hold Mustika hasta following the movements of the legs.

३०. पुराटी चारी ।

उद्वृत्त ऐशे दोन पांय परस्पर बडविजेल्लियां पुराटिका ह्मणिजेते । यान्त मुष्टिहस्त यथोचित पादास अनुसरून धरावे ॥

30. புராடி சாரி

முன் பாதங்களில் நிற்கையில் கால்கள் ஒன்றோடொன்று தட்டினால் 'புராடிகா சாரீ' என்று பெயர். இந்த சாரியில் பாதத்தை அனுசரித்து முஷ்டிக ஹஸ்த முத்திரையைத் தரிக்க வேண்டும்.

३१. अर्धपुराटिका चारी ।

उद्वृत्तेन निकुट्टेनांघ्रिणांघ्रेश्वेन्निकुट्टनम् ।
उद्धृतस्यान्यपादस्य तदोक्तार्धपुराटिका ॥ २०७

अत्रारालौ करौ ज्ञेयौ अन्यौ वापि यथोचितौ ।

31. ARDHAPURATIKA CARI

(207-208) If, one of the feet rests on the fore-foot and is then raised and made to strike the other in the same position, then it is called 'Ardha Puratika Cari'. In this cari the hands hold Arala or other mudra according to the dancer's choice.

३१. अर्धपुराटिका चारी ।

एकपाय अग्रभागाने उभे राहूनें त्याला उचलिजेल्या दुसऱ्या पांयांने वडविणें, यांत अरालहस्तहो इतरहस्तहो यथोचित धरावे ॥

31. அர்த்த புராடிகா சாரி

ஓர் காலால் முன் பாதத்தின் மீது நின்று அந்த பாதத்தை உயர்த்தப்பட்ட மற்றோர் பாதத்தால் தட்டினால் 'அர்த்த புராடிகா சாரீ' என்று பெயர், இந்த சாரியில் அராளம் அல்லது வேறு ஹஸ்த முத்திரையைத் தரிக்கலாம்.

३२. निकुट्टिका चारी ।

स्थितोऽग्रेण यदा पादः कुञ्चितेन निकुट्टिका ॥ २०८

अत्र स्यात्त्रिपताको वा यथौचित्यादरालकः ।

32. NIKUTTIKA CARI

(208–209) When one of the legs is slightly bent and rests on its fore-foot, then it is called 'Nikuttika cari'. In this cari the hands hold either Tripataka or Arala mudra according to circumstances.

३२. निकुट्टिका चारी ।

एक्या पांयाचा अग्रभागमात्रा वांकवून रोवून उभा ठाकणें याालाच निकुट्टिका ह्मणिणें । यांत त्रिपताकहस्तहो अरालहस्तहो यथोचित धरावे ॥

32. நிகுட்டிகா சாரி

ஒரு காலின் முன் பாதத்தை மட்டிலும் வளைத்து மற்றொன்றை சமமாகவும் வைத்து நின்றால் 'நிகுட்டிகா சாரீ' என்று பெயர்.

இந்த சாரியில் த்ரிபதாகம் அல்லது அராள ஹஸ்த முத்திரையைத் தரிக்கவேண்டும்.

३३. लताक्षेपा चारी ।

पश्चान्न्यस्य पुरस्थश्च पुरस्थश्चेन्निकुञ्चितः ॥ २०९

यदा पादस्तदा प्रोक्ता लताक्षेपा मनीषिभिः ।
पताकस्त्रिपताको वा ज्ञातव्यो हस्तकोऽत्र हि ॥ २१०

33. LATAKSEPA CARI

(209-210) If starting from the Samapada pose one of the legs is placed at the back and the other foot is shortened by bending the toes and raising the heel, then it is called Lataksepa cari. In this cari the hands hold either Pataka or Tripataka mudra.

३३. लताक्षेप चारी ।

प्रथमतः समपादाने राहून त्यानन्तरे एकपांय माघे ठेवून पुढे आहेतो पांय निकुञ्चित करणें ॥ निकुञ्चितह्मणिजें बोटे वांकवून-टांचा तलपांय उंच करणें, ऐसे केल्यां लताक्षेपा ह्मणिजेते । यांत पताक हस्तहो त्रिपताकहो धरावे ॥

33 லதாக்ஷேபா சாரீ

முதலில் சமபாத ஸ்தானத்தில் நின்று பிறகு ஒரு காலைப் பின்புறத்தில் கொண்டுபோய் மற்றொன்றை நிகுஞ்சிதமாகச் செய்து நின்றால் 'லதாக்ஷேபா சாரீ' என்று பெயர். நிகுஞ்சிதமெனில் விரல்களை வளைத்து உள்ளங்காலையும் குதிகாலையும் உயர்த்துவதாகும். இந்த சாரியில் பதாக ஹஸ்தம் அல்லது த்ரிபதாக ஹஸ்த முத்திரையையாவது தரிக்கவேண்டும்.

३४. अड्डस्खलितिका चारी ।

अंघ्रौ संस्खलितौ तिर्यगड्डस्खलितिका मता ।
अत्रारालौ यथायोग्यं ज्ञातव्यावूर्ध्वतोमुखौ ॥ २११

34. ADDÁSKHALITIKA CARI

(211) When the feet are made to slip in an oblique direction as if with a sprain, then it is called 'Addaskhalitika cari'. In this cari the hands hold Arala hasta facing upward.

३४. अड्डस्खलितिका चारी ।

दोन पांयहीं बाजूस तिर्कस अडखळल्यापरि अभिनय करणें,
यांत ऊर्ध्वाभिमुख अरालहस्त यथायोग्य धरावे ॥

34 அட்டஸ்கலிதிகா சாரி

பக்கங்களில் சாய்வாக திட்டப்பட்டுள்ள இரு கால்களால் சுளுக்குண்டதுபோல் அபிநயிப்பதற்கு 'அட்டஸ்கலிதிகா சாரி' என்று பெயர். இந்த சாரியில் மேல் நோக்கிய அராள ஹஸ்த முத்திரையை யுக்தானுசாரமாய்த் தரிக்கவேண்டும்.

३५. समस्खलितिका चारी ।

पुरः पश्चाद्यदा पादौ तिर्यक् संस्खलतस्तदा ।
युगपत्प्रोच्यते चारी समस्खलितिकाभिधा ॥ २१२

उत्तानाधस्तलौ ज्ञेयौ त्रिपताकौ कराविह ।
अत्र चारिषु ये प्रोक्ताः संप्रदायविदा मया ।
करा ज्ञेयास्ततोऽप्यन्ये गीतादौ तत्तदर्थगाः ॥ २१३

इति पञ्चत्रिंशद्देशीभौमीचार्यः ॥

35. SAMASKHALITIKA CARI

(212–213) When the feet are made to slip one foot forward and the other backward and sideward, then it is called 'Samaskhalitika cari'. In this cari the hands hold Tripataka mudra one facing upward and the other downward.

The mudras that have been stated by me for the various cari have been based upon established tradition. These mudras may be substituted in the dance for songs to suit the context.

Here ends the 35 Desi Bhoumi caris.

३५. समस्खलितिका चारी ।

पुढें एकपांय मागें अथवा बाजूस एकपांय तिर्कस अटकळल्यापरीं एक्याच समयांत करिणें, यांत एक्याहातानें उताणा त्रिपताक हस्त धरून दुसऱ्या हातानें पालथा त्रिपताक हस्त धरावा ।

या पन्नीस चारी पैकीं ज्याचारींत जेहस्त साङ्गीतलेकीं ते संप्रदायानुसार सांगीतले करितां या खेरीज त्यात्या प्रकरणांत गानार्थ गीतप्रयोग करितानां त्या गीताच्या अर्थानुसार तत्तदुचित हस्तहीं धरूंयें ॥

35. சமஸ்கலிதா சாரி

முன்னொரு காலும் பின் புறந்திலாவது பக்கத்திலாவது ஒரு காலுமாக இருகால்களையும் சாய்வாக வைத்து சுளுக்குண்டதுபோல் ஒரே சமயத்தில் செய்தால் சமஸ்கலிதா சாரீ' என்று பெயர்.

இந்த சாரியில் ஒரு கையால் மேல்நோக்கிய த்ரிபதாக ஹஸ்த முத்திரையையும் மற்றொரு கையால் கீழ் நோக்கிய த்ரிபதாகஹஸ்த முத்திரையையும் தரிக்கவும்.

குறிப்பு :— மேற்கூறிய முப்பத்தைந்து சாரிகளில் சொல்லப்பட்டுள்ள ஹஸ்த முத்திரைகள் சம்பிரதாயத்தை யனுசரித்து சொல்லப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர சந்தர்ப்பத்தை அனுசரித்தும்பாடும் கீதங்களின் பொருளை யனுசரித்தும் உசிதம் போல் ஹஸ்த முத்திரைகளைத் தரிக்கலாம்.

தேசி பௌமிசாரீ முற்றிற்று

अथ [१९] एकोनविंशतिदेश्याकाशिकीचार्यः ॥

विद्युद्भ्रान्ता पुरःक्षेपा विक्षेपा हरिणप्लुता ।
अपक्षेपा च डमरी दण्डपादाङ्घ्रिताडिता ॥ २१४

जङ्घालङ्घनिकाऽलाता जङ्घावर्ता च वेष्टनम् ।
उद्वेष्टनमथोत्क्षेपः पृष्ठोत्क्षेपश्च सूचिका ॥ २१५

निद्रा प्रावृतमुल्लोल इत्यत्रैकोनविंशतिः ।

DESI AKASIKA CARIS

(214—215) Desi caris (Provincial steps) off the ground: 1. Vidyudbhranta, 2. Purahksepa. 3. Viksepa. 4. Harinapluta, 5. Apaksepa. 6. Damari, 7. Drndapada. 8: Anghritadita, 9. Jnaghalanghanika, 10. Alata 11. Janghavara 12. Vestanam, 13. Udvestanam. 14. Utksepa. 15. Prsthotksepa, 16. Suci. 17. Viddha. 18. Pravrta and 19. Ullola.

अथ [१९] एकोनविंशतिराकाशचार्यः । (देशी)

पुरःक्षेपा, विक्षेपा, अपक्षेपा, हरिणप्लुता, विद्युद्भ्रान्ता, डमरी, दंडपादा, अंघ्रिताडिता, जंघालंघनिका, अलाता, जंघावर्ता, वेष्टनम्, उद्वेष्टनम्, उत्क्षेपः, सूची, पृष्ठोत्क्षेपः, विद्धा, प्रावृतम्, उल्लोलः ॥

தேசி ஆகாசிகீ சாரி (19)

தேசி ஆகாசிகீ சாரிகள் பத்தொன்பது வகைப்படும் :-

1. புரக்ஷேபா 2. விக்ஷேபா 3. அபக்ஷேபா 4. ஹரிணப்லுதா 5. வித்யுத்ப்ராந்தா 6. டமரீ 7. தண்டபாதா 8. அங்க்ரிதாடிதா 9. ஜங்காலங்கநிகா 10. அலாதா 11. ஜங்காவர்த்தா 12. வேஷ்டனம் 13. உத்வேஷ்டனம் 14. உத்க்ஷேபா 15. ஸூசி. 16. ப்ருஷ்டோத்க்ஷேபம் 17. வித்தா 18. ப்ராவ்ருதம் 19. உல்லோலம் என்பனவாம்

இனி இவற்றின் அசைவு லக்ஷணங்களைப்பற்றித் தெரிந்துகொள்வோம்.

१. पुरःक्षेपा ।

कुञ्चितांघ्रि समुत्क्षिप्य पुरो विस्तीर्य च द्रुतम् ॥ २१६

अत्रनौ विन्यसेद्यत्र पुरःक्षेपेति कीर्तिता ।
यथोचितौ करौ कार्यौ यथाकर्मानुगाविह ॥ २१७

1 PURAHKSEPA CARI

(216--217) If, the leg is bent raised up extended forcibly forward and planted on the ground. it is called Purahksepa. The accompanying mudras of the hand may be chosen according to circumstances.

१. पुरःक्षेपा चारी ।

पांयांचा अग्रभागमात्र भोईस लागेलसें वोटेंही स्वल्पवांकवून उभा ठाकणें जें तें कुञ्चित ह्मणिजेतें । कुञ्चित ऐसा येकपांय उचलून पुढें वेगानें पसरून भोईवरि ठेविणें, ते परक्षेपा ह्मणिजेंतें । यांत अर्थानुसार यथोचित पताकादि हस्त धरावे ॥

1. புரக்ஷேபா சாரி

ஒரு கால் சமமாகவும் மற்றொன்றின் விரல்களை சிறிது வளைத்து முன் பாதத்தைத் தரையில் வைத்தும் நிற்க வேண்டும். அப்பொழுது அந்த கால் குஞ்சிதமாக (வளைவாக) இருக்கும். பிறகு வளைந்திருக்கும் காலை உயர்த்தி வேகமாக முன் பக்கத்தில் விசாலமாக வைக்க வேண்டும். இதற்கு 'புரக்ஷேபா சாரீ' என்று பெயர்.

இந்த சாரீயில் கருத்தையனுசரித்து உகந்த வகையில் பதாகம் முதலிய ஹஸ்த முத்திரைகளைத் தரிக்கவேண்டும்.

२. विक्षेपा चारी ।

पुरोगमनभागे चेद्विस्तार्यांघ्रिं पुनः पुनः ।
आकुञ्चयेत्तदा प्रोक्ता विक्षेपा शास्त्रवेदिने ॥ २१८

2. VIKSEPA CARI

(218) If the feet which are extended forward are drawn back and contracted. then it is called 'Viksepa cari'. This is used for eluding weapons.

२. विक्षेपा चारी ।

एकपांय थोडें वांकवून उचलून पुढें नेवून पुनः मार्घे मुदडून घेणें ऐसें वारंवार केल्यां विक्षेपा ह्मणिजेते । शस्त्रा चेमार चुकुंघेणे विषईं उपयोग ॥

2. விக்ஷேபா சாரி

அடிக்கடி ஒரு காலை வளைத்து உயர்த்தி முன்னே கொண்டுசென்று மறுபடியும் பின்னே மடக்கிக்கொள்வதற்கு 'விக்ஷேபா சாரீ' என்று பெயர். யுத்த சந்தர்ப்பங்களில் எதிரியின் குறியைத் தவிர்க்க இந்த சாரீயை உபயோகிக்கலாம்.

३. अपक्षेपा चारी ।

वाह्यपार्श्वेन यत्रोरूण्ठं स्पृष्ट्वेतरत्पदम् ।
तथैव कटिमायाति साऽपक्षेपा मता सताम् ॥ २१९

3. APAKSEPA CARI

(219) If the back of the thigh is touched by the outer-side of the foot and then raised towards the hip, then it is called "Apaksepa cari"

३. अपक्षेपा चारी ।

एकपांय माघिल्या भागीं उचलून मांडीच्या बाहेरिल्या बाजू कडून मांडीच्या माघिल्या भागातें शिवून त्यानंतरें माजा कडें ते पावूल नेणे ते अपक्षेपा ह्मणिजेंते ॥

3. அபக்ஷேபா சாரி

ஓர் பாதத்தை பின்புறத்தில் உயர்த்தி, துடையின் பின்பாகத்தைத் தொட்டு அந்த பாதத்தை இடுப்பினருகே கொண்டுபோவதற்கு 'அபக்ஷேபா சாரீ' என்று பெயர்.

४. हरिणप्लुता चारी ।

लतांघ्रिमुत्प्लुत्याभीक्ष्णं संपाताद्धरिणप्लुता ।

4. HARINAPLUTA CARI

(220) If the forefoot is raised in the course of a jump and is let fall on the ground. then it is called 'Harinapluti cari'.

४. हरिणप्लुता चारी ।

लतापादानें उत्प्लुतिकरून भोईवरि पायें ठेविणें, ते हरिणप्लुता ह्मणिजेते । उत्प्लुति ह्मणिजे उडणें । यांत यथा योग्य पताकादिहस्त धरावे ।

4. ஹரிணப்லுதா

முன்னங்கால்களால் குதித்து கால்களைத் தரையில் வைத்தால் 'ஹரிணப்லுதா சாரீ' என்று பெயர். உத்ப்லுதம் என்றால் தாவுதல் அல்லது துள்ளிக் குதித்தல். இந்த சாரீயில் சந்தர்ப்பத்திற்கேற்றபடி பதாகம் முதலிய ஹஸ்த முத்திரைகளைத் தரிக்கவேண்டும்.

५. विद्युद्भ्रान्ता चारी ।

पुरोंघ्रिमुत्क्षिपन् यस्यां ललाटोपरि वेगतः ॥ २२०

संभ्राम्य भुवि संन्यस्येद्विद्युद्भ्रान्ता तदोच्यते ।

5. VIDYUDBHRANTA CARI

(220-221) When the foot is thrown up moved in a circle round the forehead with force and placed on the ground, then it is called 'Vidyud-bhranta cari.

५. विद्युद्भ्रान्ता चारी ।

एकपांय पुढें उचलून कपालावरि वेगानें फिरवून भोईवरि ठेविणें । यथायोग्य पताकहस्त धरिणें ॥

5. வித்யுத்ப்ராந்தா

ஓர் காலை முன்புறத்தில் உயரத் தூக்கி வேகமாக நெற்றியைச் சுற்றி தரையில் வைத்தால் 'வித்யுத்ப்ராந்தா சாரீ' என்று பெயர். இந்த சாரீயில் ஏற்ற வகையில் பதாக ஹஸ்த முத்திரையைத் தரிக்க வேண்டும்.

६. डमरी चारी ।

वामदक्षिणतो भ्रांत्या कुञ्चिताग्रेर्डमर्यथ ॥ २२१

इयं गुडालसंज्ञातः प्रसिद्धा नटभाषया ।

6. DAMARI CARI

(221-222) When the foot is bent and revolved on the right side and the left (in the clock-wise

and counter clock-wise direction) then it is called "Damari cari". It goes by the name of Gudala among dancers.

६. डमरी चारी ।

कुञ्चित ऐसा एकपांय दोनबाजूस डोलविणे । यालाच लोकान्त गुडाल ह्मणणें ॥

6. டமரீ சாரீ

ஓர் காலை சிறிது வளைத்து இரு பக்கங்களிலும் அசைய வைப்பதற்கு 'டமரீ சாரீ' என்று பெயர். இதனை பலர் 'குடால்' என்று சொல்லுகின்றனர்.

७. दण्डपादा चारी ।

आवर्त्य स्वस्तिकं यत्र चरणौ तिर्यगूर्ध्वतः ॥ २२२

विक्षिप्तौ दण्डपादेति प्रोच्यते नटसूरिभिः ।

7. DANDAPADA CARI

(222-223) If starting from leg crossed, the feet are thrown up in an oblique direction, then it is called "Dandapada cari".

७. दण्डपादा चारी ।

प्रथमतः दोन पांयहीं स्वस्तिकाकार जोडूंठेवून त्यानंतरें त्यांत एकेक पांय तिर्कस बाजूस उंच उचलिणें ते दण्डपादा ह्मणिजेते ॥

7. தண்டபாத சாரி

முதலில் இருகால்களையும் ஸ்வஸ்திகாகாரமாகச் சேர்த்து நின்று பிறகு ஒவ்வொரு காலையும் சாய்வாகப் பக்கத்தில் உயர்த்துவதற்கு 'தண்டபாத சாரி' என்று பெயர்.

८. अंघ्रिताडिता चारी ।

उत्प्लुत्यांघ्रि प्रविस्तार्य गगनो ताडयेन्मिथः ॥ २२३

यदा पादतलद्वन्द्वं तदोक्ता सांघ्रिताडिता ।
इमां दुसीमिति प्राहुः नर्तनपंडिता ॥ २२४

8. ANGRITADITA CARI

(223-224) When the feet are first placed wide-apart and then a jump is made and both the soles of the feet strike against each other in the air before coming down then it is called 'Anghritadita cari'. It goes by the name of Dusim in the provincial slang of dancers.

८. अंघ्रिताडिता चारी ।

प्रथमतः उडून दोन पांय पसरून अंतरिक्षांत परस्पर तलपांय चडविणें । याल्लाच नटानीं दुसीं क्षणताहेत ॥

8. அங்க்ரிதாடிதா சாரி

முதலில் சிறிது தாவவேண்டும். தாவுகையில் இரு கால்களையும் விசாலமாகப் பரப்பி உள்ளங்கால்கள் ஒன்றோடொன்று தட்டவேண்டும். இதற்கு 'அங்க்ரி தா்டிதா சாரி' என்று பெயர். இதனை 'துஸீம்' என்றும் சொல்லுவார்கள்.

९. जङ्घालङ्घनिका चारी ।

किञ्चिदाकुञ्चितं पादमन्यपादेन लङ्घयेत् ।
अन्तरिक्षे तदा प्रोक्ता जङ्घालङ्घनिका बुधैः ॥ २२५

कालदांटेति तैलङ्गास्तामाहुर्नटपण्डिताः ।

९. JANGHALANGHANIKA

(225-226) When one foot jumps over the other which is slightly bent then it is called 'Janghalanghanika cari'. This is known as Kaladanta in the Telugutradition.

९. जङ्घालङ्घनिका चारी ।

प्रथमतः स्वल्प एक पांय कुञ्चित करून अंतरीक्षाचे ठांई त्याते दुसऱ्या पांयानें वलांडिगेंतें जङ्घालङ्घनिका ह्मणिजेते तैलंग्या भाषेनें कालदांटा ह्मणणें ॥

9. ஜங்காலங்கனிகா சாரி

முதலில் சமமாக நின்று ஓர் காலை சிறிது வளைத்து மற்றொரு காலால் வளைத்த காலை அந்தரத்தில் தாண்டினால் 'ஜங்காலங்கனிகா சாரீ' என்று பெயர். தெலுங்கு பாஷையில் இதனை 'கால தாண்டா' என்று சொல்லுகின்றனர்

१०. अलाता चारी ।

अलातांघ्रौ पृष्ठगते शीघ्रमन्यांघ्रिलङ्घिते ॥ २२६
पक्षिपक्षत्रदेनां तु भाषया डालमूचिरे ।

10. ALATA CARI

(223-227) If one foot is taken backward, the dancer jumps with the other foot forward, the cari is called 'Alata'. The pose while jumping is that of a bird with outstretched wings. It is called 'Dal' in the parlance of dancers.

१०. अलाता चारी ।

प्रथमतः उडून एक पांय मार्गे मुदडून दुसऱ्यापायानें जलदीनें वलांडिणें । तेव्हां ते पांखराच्या पंखापरी असेल यालाच नाट्य भाषेण 'डाल' म्हणणें ॥

10. அலாதா சாரி

முதலில் சிறிது தாவி ஒரு காலைப் பின்னே மடக்கி மற்றொரு காலால் தாண்டவேண்டும். தாண்டுகையில் கால்கள் பறவைகளின் இறக்கைகளைப் போன்றிருக்கும். இதற்கு 'அலாதா சாரீ' என்று பெயர். நாட்டிய பாஷையில் இதனை 'டால்' என்று சொல்லுவார்கள்.

११. जङ्घावर्ता चारी ।

अन्तर्भ्रमस्य पादस्य जानुपृष्ठाश्रितं तलम् ॥ २२७

बहिर्भ्रमस्य तत्पार्श्वे जङ्घावर्ता तदोच्यते ।

11. JANGHAVARTA CARI

(227-228) If the foot is revolved in the inward direction and rested at the back of the other knee or the foot revolving in the outward direction rests at the side of the other knee, then it is called 'Janghavarta cari.'

११. जङ्घावर्ता चारी ।

अन्तरिक्षांत एकपांय आंतिल्यापट्टींत फिरवून त्याच्य तलपांय दुसऱ्या पायाच्या गुडघ्यामाघें ठेविणें । ते पांय बाहेरिल्या पट्टींत फिरविल्यां गुडघ्यास पार्श्वभागीं तलपांय जोडूं ठेविणें ॥

11. ஜங்காவர்த்தா

ஓர் காலை அந்தரத்தில் உட்புறமாகச் சுற்றி உள்ளங்காலை மற்றொன்றின் முழங்காலின் பின்புறத்தில் வைத்தல் வேண்டும். உட்புறமின்றி வெளிப்புறத்தில் சுற்றப்படுமேயானால் முழங்காலின் ஓர் பக்கத்தில் உள்ளங்காலை வைக்கவேண்டும்.

१२. वेष्टन चारी ।

एकमन्येन चेदंघ्रिं वेष्टयेद्वेष्टनं तदा ॥ २२८

12. VESTANA CARI

If one foot is wound round the other then it is called 'Vestana cari'.

१२. वेष्टन चारी ।

अंतरिक्षाचे ठाईं एकया पायांतें दुसऱ्या पांयानें गुण्डाळिणे ॥

12. வேஷ்டன சாரீ

அந்தரத்தில் ஓர் கால் மற்றொன்றால் அணைத்து சுற்றப்படுமானால் 'வேஷ்டன சாரீ' என்று பெயர்.

१३. उद्वेष्टन चारी ।

कृत्वा वेष्टनमंघ्रिश्चेत्पृष्ठतस्संप्रसारितः ।
तदोद्वेष्टनमाख्यातं नटैर्नर्तनपण्डितैः ॥ २२९

13. UDVESTANA CARI

(229) If a foot is. after winding round the other. extended backward, then it is called 'Udvestana cari'.

१३. उद्वेष्टन चारी ।

प्रथमतः वेष्टनचारी करून त्यानंतरे गंडाळिलातो दुसरा पांय माघें पसरिणें । वेष्टनचारी यामाघें सांगीतलाच आहे ॥

13. உத்வேஷ்டன சாரி

முதலில் வேஷ்டன சாரியைச் செய்து பிறகு சுற்றப் பட்ட காலைப் பின்புறத்தில் பரப்ப வேண்டும். இதற்கு 'உத்வேஷ்டன சாரீ' என்று பெயர்.

१४. उत्क्षेप चारी ।

पुरतः पृष्ठतो यत्र त्वंघ्रेराकुञ्चितस्य हि ।
उत्क्षेपो जानुपर्यन्तं तदोत्क्षेपः प्रकीर्तितः ॥ २३०

14. UTKSEPA CARI

(230) If the foot is bent forward and backward and then lifted up to the height of the knee, then it is called Utksepa cari.

१४. उत्क्षेप चारी ।

कुञ्चित ऐसा एक पांय पुढें आणि मावेहीं क्रमाने गुडघ्या पर्यंत उचलिणें ॥

14. உத்க்ஷேப சாரி

பாதத்தை முன்னும் பின்னுமாக வளைத்து முழங்கால் உயரத்திற்குத் தூக்கினால் உத்க்ஷேப சாரீ என்று பெயர்.

१५. सूची चारी ।

ऊरुं पार्श्वे भुवि न्यस्य पदं यत्र प्रसारयेत् ।
तीक्ष्णाग्रीकृत्य तामाहुः सूची केचन सूरयः ॥ २३१

15. SUCI CARI

(231) If the thigh rests on the ground on its side and the foot is extended with pointed toes, then it is called 'Suci cari'.

१५. सूची चारी ।

भोईवरि माण्डीचा पार्श्वभाग ठेवून पावूल जेतें अग्रभाग कूश्व करून पसरिणें ॥

15. ஸூசீ சாரி

துடையின் பக்கத்தைத் தரையின்மீது படும்படி வைத்து முன் பாதத்தைக் கூர்மையாக முன்னே நீட்டினால் 'ஸூசீ சாரி' என்று பெயர்.

१६. पृष्ठोत्क्षेपा चारी ।

उत्क्षेपः पृष्ठतश्चेत्स्यात् पृष्ठोत्क्षिप्तममुं विदुः ।

16. PRSTHOTKSEPA CARI

(232) If one foot is raised backward, then the cari is called 'Prsthotksepa'

१६. पृष्ठोत्क्षेपा चारी ।

कुञ्चिता ऐसा एक पांय माघें मात्र गुडघ्या इतुके उंच उचलिणें तो पृष्ठोत्क्षेप ह्मणिजेतो ॥

16. ப்ருஷ்டோத்க்ஷேப சாரி

ஓர் காலைப் பின்புறத்தில் வளைத்து முழங்கால் உயரத்திற்கு உயர்த்தினால் 'ப்ருஷ்டோத்க்ஷேப சாரீ' என்று பெயர்.

१७. विद्धा चारी ।

स्वस्तिकीकृत्य पादश्चेदेक आंदोलितः पुरः ॥ २३१

कुञ्चितश्चेत्तदा प्रोक्ता विद्धा सा कथ्यते बुधैः ।

17. VIDDHA CARI

(232-233) When both the feet are crossed and then one of them is moved side to side in front and then contracted, then it is called 'Viddha cari'.

१७. विद्धा चारी ।

प्रथमतः दोन पांयहीं स्वस्तिकाकार तिर्कस ठेवून त्यानंतरें त्यापैकीं एक पांय उचलून पुढें डोलवून कुञ्चित करिणें — कुञ्चित म्हणजे टांचा, तळपांय उचलून बोटें वांकविणें । रत्नकरांत दोन पांय हीं कुञ्चित करणें असे सांगीतलें आहे ॥

17. விந்தா சாரி

முதலில் இரு கால்களையும் ஸ்வஸ்திகாகாரமாகச் சாய்த்து வைத்து அவற்றிலிருந்து ஒன்றினை எடுத்து முன் பக்கத்தில் இங்குமங்கும் அசைக்கவேண்டும். பிறகு உள்ளங்கால் குதிகால்களை உயர்த்தி விரல்களை மடக்க வேண்டும். ரத்னாகரததில் இரு கால்களும் வளைந்திருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

१८. प्रावृत्ता चारी ।

ललिते वलिते देहे उद्वृत्तश्चरणो यदा ॥ २३३

प्रावृतन्तु तदा ज्ञेयं मदनोत्साहकारणम् ।

18. PRAVRTA CARI

(233-234) When the body is twisted in a graceful manner and the foot is lifted upward, then it is called 'Pravrta cari'. It is used to induce high spirits among lovers.

१८. प्रावृता चारी ।

फार सुन्दर दिसेलसें ललितपणानें ठमकत पांय उद्वृत्त करिणें ते प्रावृत म्हणिजेते । ते मदनोत्साहास कारण असेल ॥

18. ப்ராவ்ருதா சாரீ

மிகவும் அழகாகவும் மிருதுவாகவும் வெட்டிக் கொண்டு (குலுக்குடன்) கால்களை உயர்த்துவதற்கு 'ப்ராவ்ருத சாரீ' என்று பெயர்.

१९. उल्लोल चारी ।

क्रमेणोल्लोलनादंघ्र्योरुल्लोलः परिकीर्तितः ॥ २३४

इति एकोनत्रिंशत्‍देशी आकाशिकीचार्यः ॥

19. ULLOLA CARI

(234) When the feet are lifted and shaken one after the other, then it is called 'Ullola cari'.

Here end the 19 Desi Akasiki caris.

१९. उल्लोल चारी ।

दोन पांयहिं क्रमानें उल्लोलनयुक्त केल्यां उल्लोल ह्मणिजेतो । उल्लोलन ह्मणिजे पांयांचा आंगोटामात्र भोईस लागेलसें पांय स्वल्प उजलून हालवीत मागे अथवा बाजूस नेणें असा अभिप्राय होतो । समग्र आकाश चारींत प्रथम उत्प्लुति करावी असे कित्तेक ह्मणताहेत । या आकाश चरींत उत्प्लुति प्रथमतः करून त्यानंतरें चारी प्रयोग करावा । उत्प्लुति ह्मणिजे उडणें ।

19. உல்லோல சாரீ

இரு பாதங்களின் பெருவிரல்களை மட்டும் தரையில் ஊன்றி பாதங்களின் மற்ற பாகங்களைச் சிறிது உயர்த்திப் பின்புறத்திலாவது பக்கங்களிலாவது பாதங்களை அசைத்தால் 'உல்லோலனம்' என்று பெயர். இரு கால்களாலும் மேற்சொன்ன முறையில் உல்லோலனம் செய்தால் 'உல்லோல சாரீ' என்று பெயர்.

குறிப்பு: ஆகாசிகீ சாரீகள் எல்லாவற்றிலும் முதலில் ஒரு முறை குதித்து நின்று; பிறகு சாரீயைத் துவக்க வேண்டும். அவ்வாறு தாவுதலுக்கு நாட்டியத்தில் 'உத்ப்லுதி' என்று பெயர்.

தேசீ ஆகாசிகீ சாரீ முற்றிற்று



சரசுவதி மகால் நூலக அச்சகம்